
நகர் ஊரமைப்பு துறை
கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு துறை
ஓசூர் புதுநகர் வளர்ச்சிக்குழுமம்
அச்செட்டிப்பள்ளி ஊராட்சி

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், ஓசூர் ஊராட்சி ஒன்றியம், அச்செட்டிப்பள்ளி ஊராட்சி, அச்செட்டிப்பள்ளி கிராம புல எண்கள்: 1239/1A, 1239/1B, 1244/1, 1245, 1246, 1247/1, 1247/2, 1248/1B, 1248/2, 1249/1, 1249/2, 1250/1A, 1252/1B1B & 1253/2B -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.



அளவு :1:400

கோப்பு எண்: **WS28DGHF / 2026**

குறிப்பு

மனைப்பிரிவின் பரப்பு (கிரய ஆவணப்படி)	:	4.03.86 ஹெக்டர் (அ) 9.9798 ஏக்கர்
மனைப்பிரிவின் பரப்பு (பட்டா ஆவணப்படி)	:	4.04.92 ஹெக்டர் (அ) 10.00 ஏக்கர்
கோரிய மனைகள்	:	165
ஒதுக்கிய மனைகள்	:	165 (எலிபேர் பிரிவு மனைகள் 52: 48 முதல் 61 வரை, 72 முதல் 86 வரை , 97 முதல் 109 வரை & 119 முதல் 128 வரை -2897.50 ச.மீ (10.26%)
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையில் உள்ள சாலை	:	

பொதுஒதுக்கீடு:

உத்தேச சாலை	:	
மனைப்பிரிவின் பரப்பு	:	40386.00 ச.மீ (அ) 9.9798 ஏக்கர்
மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகளின் பரப்பு	:	12146.18 ச.மீ

மனைப்பிரிவின் மொத்த பரப்பு -- உத்தேச சாலைகளின் பரப்பு

: 40386.00 ச.மீ -- 12146.18 ச.மீ = 28239.82 ச.மீ

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு	:	12146.18 ச.மீ	
புல்வெளி-1	:	200.90 ச.மீ	
பூங்கா	:	2918.05 ச.மீ	(10.33%)
பொது உபயோகம் (PP)	:	245.40 ச.மீ	(0.86%)

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

(TANGEDCO) ஒதுக்கீடு	:	196.50 ச.மீ	(0.69%)

கட்டிட வரம்பு	உத்தேச சாலை	மூலை முடக்கு
1.50 மீ	9.00 மீ, 10.00 மீ (ம) 12.00 மீ அகல சாலைகளுக்கு	1.50 மீ X1.50 மீ

நிபந்தனைகள்:

1.இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கும்முன் இடத்தினை எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2.அரசானை எண் : 18 (ம) அரசானை எண் : 16 , நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.2019-ன் படி பூங்கா, சாலை ஒதுக்கீடுகள் (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்று நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்று தெரிவிக்கப்படுகிறது.

3.இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கும்முன் அரசானை எண் : 181 வீ.வ (ம) ந.வ-ன் நாள் : 09.12.2020 PARA 4 (IV)-ல் தெரிவித்த கீழ்கண்ட நிபந்தனைகள் பின்பற்ற வேண்டும்.

4.நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

5.இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.

6.இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் **6'-0"x4'-0"** என்ற அளவுக்கு குறையாமல் காங்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

7.மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய் உட்பிரிவு செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

சிறப்பு நிபந்தனைகள்:

1.நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் குத்தகைப்பத்திரம் பட்டா தானப்பத்திரம் பொதுஅதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரரின் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிப்பார்க்கப்படுகிறது.அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

2.சொத்தினை வாங்க எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி படுத்திக்கொள்ள வேண்டும் மேலும் அதன் மேல் யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

ம.வ/ஓ.பு.ந.வ.கு(கிமா) SWP எண்: 24 /2026

ம.வ/தி.அ/ஓ.பு.ந.வ.கு(கிமா) SWP எண்: 12 /2026

Signature valid Signature valid

உதவி இயக்குநர்/துணை இயக்குநர், (மு.கூ.பொ)
ஓசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்,ஓசூர்.